දිනේෂ් ගුණවර්ධන - (පා.ම.) - විදේශ අමාත්‍ය
திினேஷ் குணவர்த்தன - (பா.உ.) வெளிநாட்டு அமைச்சர்
Dinesh Gunawardena - (M.P.) Foreign Minister

## சவால்களிலிருந்து மீண்டெழுவதற்கு நாங்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோராகவிருப்போம்

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த 73வது ஆண்டு விழாவை முன்னிட்டு, இலங்கையிலும், உலகெங்கிலும் உள்ள இலங்கையர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகின் ஒரு சிறந்த மற்றும் பெருமைமிக்க தேசம் என்ற வகையிலும், மேற்கத்தேய வெளிநாட்டுப் படையெடுப்புக்களால் நானூற்று ஐம்பது ஆண்டுகளாக நாட்டில் குடியேற்றங்களை மேற்கொள்வதன் மூலமான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு எதிரான ஒரு தேசம் என்ற வகையிலும், நாட்டின் விடுதலை, சுதந்திரம் மற்றும் இறையாண்மைக்காக எமது கடந்தகால தேசிய வீரர்கள் மற்றும் போர்வீரர்களின் செயற்பாடுகளை பெருமையுடன் கொண்டாடுகின்றோம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களிடமிருந்து இலங்கையை விடுவிப்பதில் எந்தவித பாகுபாடும் இன்றி இலங்கையர்களாக ஒன்றிணைந்து பணியாற்றியதன் மூலம், எமது தாய்நாட்டை விடுவிப்பதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டை நாம் மரியாதையுடன் நினைவு கூர்கின்றோம். 1948 பிப்ரவரி 04ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திரத்தின் 73வது ஆண்டு நிறைவை இன்றைய தினம் குறித்து நிற்கின்றது.

1948 பிப்ரவரி 04ஆந் திகதி நாம் வெற்றி கொண்ட சுதந்திரமும், 1972 மே 22ஆந் திகதி இலங்கையை குடியரசாக அறிவித்தமையும் பிரித்தானிய ஆட்சியில் இருந்து முற்றிலும் விடுபடுவதற்கு எமக்கு உதவியது.

இலங்கை ஜனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் செழிப்பான பார்வை' என்ற இலக்குகளை யதார்த்தமயமானதாக மாற்றுவதற்கும், பல்வேறு சவால்களைத் தாண்டி எழுபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு சுதந்திரமான, சுயாதீனமான, இறையாண்மை மிக்க மற்றும் வளமான இலங்கையை உருவாக்குவதற்கும் இன்று நாம் அனைவரும் உறுதிபூணுகின்றோம் என்பதையும் நினைவில் கொள்வோம்.

இந்த நாட்டின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச அளவில் எழுந்துள்ள சவால்களையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். 30 ஆண்டுகால பிரிவினைவாத மற்றும் கொடூரமான பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் பின்னர், உலக நாடுகளுடன் நட்புறவைப் பேணி, இலங்கையை வளமான நாடாக மாற்றியமைப்பதற்கு நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதற்கிடையில், எதிர்வுகூற முடியாத உலகளாவிய தொற்றுநோயை நாமும் முழு உலகமும் இன்று எதிர்கொள்கின்றோம். முழு உலகையும் பாதிக்கும் கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து எம்மால் மீண்டெழ முடியும். இந்தத் தொற்றுநோயைத் தோற்கடிப்பதற்கான உலகின் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உள்நாட்டுப் பாரம்பரிய அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் திட்டத்தை ஆதரிப்பது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

நாம் வெற்றி கொண்ட சுதந்திரத்துடன், இலங்கையின் கௌரவம், பெருமை மற்றும் அடையாளத்தைப் பேணும் அதே நேரத்தில் அனைத்து அரசுகளுடனும் நட்பு ரீதியான ஒத்துழைப்பைப் பேணி, நடுநிலையான மற்றும் அணிசேரா வெளியுறவுக் கொள்கைக்கு முன்னுரிமை அளித்து, சுதந்திரமான, இறையாண்மை மிகுந்த, ஜனநாயக ரீதியான, ஒற்றையாட்சி நாடாக முன்னேற்றமடைவோம்.

தினேஷ் குணவர்தன
வெளிநாட்டு அமைச்சர்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498, ෆැක්ස්/பெக்ஸ்/Fax No.: +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website: www.mfa.gov.lk, ඊමේල්/மின்னஞ்சல்/E-mail : FMO@mfa.gov.lk
විදේශ අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1, ශ්‍රී ලංකාව.
வெளிநாட்டு அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Foreign Ministry, Republic Building, Colombo 1, Sri Lanka.